புலமைவளரி 5

இலக்கை நோக்கி

நேரம் :-1:00 மணித்தியாலயம் **புலமைவளரி 027** **புள்ளி** .....

பெயர்..... **பகுதி** I A.K.**மயூரன்**

பின்வரும் 1, 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருவங்கள் உள்ள மூன்று அடைப்புக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அதில் உள்ள உருக்களுக்கு ஏற்ப ஏனைய வற்றில் இருந்து வேறுபடுகின்றது. அவ்வாறு வேறுபடும் அடைப்பினைத் தெரிவு செய்க.

01.



(1)




(2)




(3)


02.



(1)




(2)



(3)

பின்வரும் 3, 4 ஆம் வினாக்கள் முதலில் ஒரு உரு தரப்பட்டுள்ளது அவ்வுருவிற்கு மூன்று விபரணம் தரப்பட்டுள்ளது அவ்விபரணங்களில் முதலில் தரப்பட்ட உருவை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.



03. (1) பசு, சாது, புள்ளி
(2) சாது, முட்டும், குட்டி
(3) விலங்கு, பாலூட்டி, உளும்




04. (1) தடை, வைரஸ், பயணம்
(2) ரைஸ், ஆபத்து, சீனா
(3) தடை, நோய், வைரஸ்

பின்வரும் 5, 6 ஆம் வினாக்களில் இலக்க தொடர்புகள் தரப்பட்டுள்ளது அத்தொடர்களின் அடிப்படையில் இடைவெளிக்குள் வரவேண்டிய இலக்கங்களை இனங்கண்டு விடையை தெரிவு செய்க?

05. 135 = 987, 123 = 654, 234 = …..
(1) 321 (2) 987 (3) 563

06. 1 9 9 0 1 9 8 0 1 9 7 0 1 9 6 0 ……..
(1) 1 9 5 0 (2) 9 6 0 1 (3) 6 8 1 0


பின்வரும் 7, 8 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கோட்டுப்பட உருவை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?



07. இவ் உருவில் காணப்படுகின்ற சதுரங்களை சிறிய சதுரங்காளக வரையக்கூடியவை எத்தனை?
(1) 4 (2) 11 (3) 8


08. இவ் உருவில் காணப்படுகின்ற முக்கோணிகள் எத்தனை?
(1) 4 (2) 12 (3) 28

09. உரு 1 இல் உள்ள வட்டக்கடதாசியை உரு 2 இல் உள்ளவாறு நான்காக மடித்து உரு 3 இல் உள்ளவாறு நிழற்றிய பகுதியை வெட்டி எடுத்து மீதிப்பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?


09. 
உரு 1


உரு 2



உரு 3



(1)



(2)



(3)


10. நான்காக மடிக்கப்பட்டு வெட்டப்பட்டுள்ள படம் முன்னே தரப்பட்டுள்ளது. அது வெட்டப்பட்ட பின்னர் மடிப்பை நீக்கினால் வரும் முழு உருவத்தை தெரிவு செய்க.




(1)


(2)


(3)



தரப்பட்டுள்ள சதுரமுகிக் கட்டையைப் பயன்படுத்தி 11, 12 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக?

11. இவ்வுருவில் காணப்படுகின்ற விளிம்புகளின் சுற்றளவு யாது?
(1) 20உஅ2 (2) 60ஊஅ2 (3) 120உஅ2

12. இவ்வுருவில் 1 உஅ அளவுடைய எத்தனை சிறிய சதுரமுக்கிக் கட்டைகள் வெட்டி எடுக்க முடியும்?
(1) 25 (2) 15 (3) 125

13. பெரிய சதுர முகிக்கட்டையை சுற்றி வர்ணம் பூசப்பட்ட பின்னர் சிறிய சதுரமுகிக் கட்டைகளாக வெட்டி எடுக்கப்பட்டால் நிறப் பூச்சு பூசப்படாத சதுரமுகிக் கட்டைகள் எத்தனை?
(1) 39 (1) 30 (3) 27


வினாக்கள் 14, 15, 16 ஆகியன பின்வரும் தகவல்களை அடிப்படையாக கொண்டவை
அந்த அடிப்படையில்
ரவி, ராகுல், நசார், காந்தன், வேந்தன், ரமணி, நிசார் ஆகியோர் விரும்பும் பழங்களின் விபரம்

- வீரப்பழத்தை விரும்புவோர் ரவி, நசார், நிசார், வேந்தன்
- பாலப்பழத்தை விரும்புவோர் ரமணி, நிசார், காந்தன், வேந்தன்
- வாழைப்பழத்தை விரும்புவோர் நசார், ராகுல், நிசார், காந்தன்

14. மூன்று பழங்களையும் விரும்பி உண்பவர் யார்?
(1) நசார் (2) நிசார் (3) வேந்தன்

15. இரண்டு பழங்களை விரும்பி உண்போர் யாவர்?
(1) நிசார், நசார், ராகுல் (2) ரமணி, ராகுல், ரவி
(3) வேந்தன், காந்தன், நசார்

16. ஒரு பழத்தினை மட்டும் விரும்பி உண்போர் யாவர்?
(1) நிசார், நசார், ராகுல் (2) ரமணி, ராகுல், ரவி
(3) வேந்தன், காந்தன், நசார்



48 சிறிய சதுரங்களினால் ஆன நெய்யரி காட்டப்பட்டுள்ளது. A என்னும் இடத்தில் இருந்து எலி உணவுக்காக தனது இருப்பிடத்தில் இருந்து அம்புக்குறி வழியே சென்று மீண்டும் A ஐ வந்தடைகின்றது. ஒரு சிறிய சதுரத்தின் ஒரு பக்க நீளம் 2cm ஆகும். நெய்யரியினைப் பயன்படுத்தி 17, 18, 19 ஆம் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

17. எலி உணவுக்காக அம்புக்குறி வழியே சென்று மீண்டும் வந்தடைந்த தூரம் யாது?
(1) 33 cm (2) 40 cm (3) 38 cm

18. எலி உணவிற்கான பயணத்தில் அது இடதுபக்கம் திரும்பிய தடவைகள் எத்தனை?
(1) 3 தடவை (2) 4 தடவை (3) 5 தடவை

19. எலி வடக்கு திசை நோக்கி சென்றதடவைகள் எத்தனை?
(1) 4 (2) 6 (3) 2

தனபதி, தினபதி, மதுபதி, பகவதி ஆகிய பெயர்களைக்குறிக்கும் ஆங்கில எழுத்திலமைந்த இரகசியக்குறியீடு முறையே NYRL, TOKL, RAKL, LOKL தரப்பட்டுள்ளது. பொருத்தமானவர்களின் பெயர்களுக்கு ஆங்கில குறியீடுகளை அறிந்து 20, 21, 22 ஆம் வினாக்களுக்கு விடை தருக

20. தினபதி என்பவரைக் குறிக்க பயன்படுத்தப்படும் இரகசிய எழுத்துக்கள் எவை?
(1) TOKL (2) RAKL (3) LOKL

21. பகவதி என்பவரைக் குறிக்க பயன்படுத்தப்படும் இரகசிய எழுத்துக்கள் எவை?
(1) NYRL (2) TOKL (3) RAKL

22. இத்தகவல்களுக்கு ஏற்ப மனது என்னும் சொல்லைக் குறிக்கும் இரகசிய குறியை தெரிவு செய்க?
(1) NYRL (2) ROA (3) RAKL


23. ஒரு மாதத்தில் உள்ள திகதிகளின் கூட்டுத்தொகை உச்ச எல்லையில் காணப்படுவதற்கு கூட்ட வேண்டிய திகதிகள் எவை?
() 1, 8, 15, 22, 29 (2) 4, 11, 18, 25, 31 (3) 3, 10, 17, 24, 31


24. 2020 ஆம் ஆண்டு ஒரு லீப் வருடமாகும் இவ் வருடத்தில் தைமாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை எனின் மாசிமாதம் முதல் வாரத்தில் வருகின்ற வியாழக்கிழமையில் வரும் திகதி யாது?
(1) 2 (2) 5 (3) 6

25. வயல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்த கறுப்பு மாடும் வெள்ளை மாடும் ஓர் இடத்தில் இருந்து தமது போக்கில் மேய்ந்து கொண்டு சென்றன. கறுப்பு மாடு கிழக்கு திசை நோக்கி சென்றது, வெள்ளை மாடு தெற்கு திசை நோக்கி சென்றது. பின்னர் கறுப்பு மாடு தெற்கு திசை நோக்கி மேய்ந்து கொண்டு சென்றது, வெள்ளை மாடு கிழக்கு திசை நோக்கி மேய்ந்து கொண்டு சென்று மீண்டும் தெற்கு திசையில் திரும்பி மேய தொடங்கியது. தற்போது இரண்டு மாடுகளும் எத்திசை நோக்கி மேய்கின்றன.?
(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு

26. எனது வீட்டிற்கு தெற்கே அக்காவின் வீடு உள்ளது. அக்காவின் வீட்டிற்கு கிழக்கே தம்பியின் வீடு உள்ளது. எனவே தம்பியின் வீட்டிற்கு எத்திசையில் எனது வீடு உள்ளது?
(1) வடமேற்கு (2) வடகிழக்கு (3) தென்கிழக்கு

27. தரப்பட்ட வடிவத்தைக் கொண்டு ஒரு தாயக்கட்டையை அமைக்கும் போது தோன்றும் விதத்தை தெரிவு செய்க






(1)




(2)




(3)

28. பின்வரும் உருவில் ஒரு அட்டைத்தாளில் செய்யப்பட்ட தாயக்கட்டை காணப்படுகின்றது அத் தாயக்கட்டையை விரிக்கும்போது தோன்றும் விதம் எது?



(1) (2) (3)

இவ் உருவைப் பயன்படுத்தி 29, 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக?




29. இவ் உருவில் மறைக்கபடாத மேற்பரப்புக்கள் எத்தனை?

(1) 26 (2) 28 (3) 22

30. உருவினைச் சுற்றி உள்ள விளிம்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 60 (2) 36 (3) 24

31. புதுவருட உற்சவத்தின்போது "கண்கட்டி பானை உடைத்தல்" போட்டியினை வகைகுறிக்கும் ஆறு உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள உருவங்களை சரியான ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தும்?



(1) BCEADF (2) CBADEF (3) CBAEDF

A தொடக்கம் E வரை பெயரிடப்பட்டுள்ள ஐந்து கூற்றுகள் உள்ளன. இவற்றில் மூன்று கூற்றுகள் தர்க்க ரீதியான தொடர்புடைமையைக் கொண்டுள்ளன. அம்மூன்று கூற்றுகளையும் குறிக்கும் விடையைத் தெரிவுசெய்க.

32. A - நான் விட்ட தேவையற்ற பகிடி காரணமாக.

B - சாந்தி குற்றமறியாத பெண்ணாவார்.

C - சாந்தி இந்நாட்களில் என்னிடம் கோபமாக இருக்கிறார்.

D - நான் விட்ட பகிடி சற்றுக் கடுமையானது.

E - பொதுவாகச் சாந்தியைத் தேடிக்கொண்டு வருவார்.

(1) ABC (2) ACD (3) CDE

பின்வரும் சொற்களுள் ஏதோ ஒன்று ஏதோ ஒருவகையில் பொருத்தமற்றது. ஏனைய சொற்களுடன் ஏதோ ஒருவகையில் பொருந்தாது.

33. (1) சுவர் (2) கூரை (3) வீடு (4) ஜன்னல் (5) கதவு

34. (1) அரண்மனை (2) வீடு (3) குடிசை (4) சத்திரம் (5) சிறை

35. மகனை இழந்த தாய் மனமுருகுவதற்குப் பொருத்தமான உவமைத்தொடர்.
1. அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல.
2. ஏறாமடைக்கு நீர் பாய்ச்சினாற் போல.
3. அக்கினியிற்பட்ட மெழுகு போல.

36. ஈகைக் குணத்தை வலியுறுத்தப் பொருத்தமான பழமொழி.
1. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
2. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு.
3. இட்டுக்கெட்டார் எங்குமில்லை.

37. ஒரு வட்ட மேசையில் ஆறு பேர் அமர்ந்துள்ளனர். P யிற்கு வலது பக்கத்திலும் A யிற்கு இடது பக்கத்திலும் அமர்ந்திருக்கும் R, S இற்கு நேர் எதிரே உள்ளார். A என்பவர் D யிற்கு இடது பக்கம் உள்ளார். D எனின் S யிற்கு இடது பக்கமாக இருப்பவர் யார்?
(1) Y (2) D (3) A

38. சதுரமுகி, நான்முகி ஆகிய திண்மங்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.
(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவானது.
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையிலும் குறைவானது.

39. மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை ஒலிக்கின்ற ஒரு கடிகாரம் முதலில் முற்பகல் 5.00 இற்கு ஒலித்தது. அது அடுத்ததாக ஒலிக்கும் இரு சந்தர்ப்பங்களைத் தரும் நேரங்கள்.
(1) மு. ப 8.00 உம் மு. ப. 11.00 உம்
(2) மு. ப. 9.00 உம் பி.ப 1.00 உம்
(3) மு. ப 8.00 உம் பி.ப 10.00 உம்

40. எனது கடிகாரம் 5 நிமிடம் பிந்தி ஓடியது. ஆனால் 5 நிமிடம் முந்தி ஓடுவதாக நான் எண்ணியிருந்தேன். நேரம் 9.00 மணி என நான் எண்ணியிருந்தபோது தொலைபேசி அழைப்பு வந்ததெனின், அழைப்பு வந்த உண்மையான நேரம் யாது?
(1) 8:50 (2) 9:10 (3) 9:00

நேரம் :-2:15 மணித்தியாலயம் **புலமைவளரி 027** **புள்ளி** .....

பெயர்..... **பகுதி** II A.K.**மயூரன்**

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

வயல் வரம்பில் அமர்ந்திருந்த ராஜாவைப் பார்த்த சந்திரனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ராஜாவுடன் விளையாடுவதற்காகச் சந்திரன் ஆர்வத்தோடு வயல் பக்கமாக ஓடோடிச் சென்றான். அத்துடன் வர்ணமயமான பறவையைப் போன்று வானத்தில் பறந்து செல்லும் பட்டத்தைக் கண்ட சந்திரன் பெருமகிழ்ச்சி அடைந்தான். தனது பட்டத்தின் நூல் அறுந்து தொலைவில் செல்வதாக ராஜா கவலையுடன் தனக்கு அருகில் வந்த சந்திரனுக்கு கூறினான். வானத்தில் அசைந்து தொலைவில் செல்லும் பட்டத்தினைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜாவின் கண்களில் கண்ணீரைக் கண்ட சந்திரன் "நாங்கள் இன்னுமொரு பட்டத்தினைச் செய்வோம்" என்று ஆலோசனை கூறினான்.

• பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(1) சந்திரன் எதற்காக வயலை நோக்கி ஓடிச் சென்றான்?

.....

(2) விரைவாகச் சென்றதைக் குறிப்பிடுவதற்கு பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

(3) சந்திரனுக்கு பட்டம் எதைப் போன்று காட்சி அளித்தது?

.....

(4) "கவலை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

.....

(5) ராஜாவின் பட்டம் வானத்தில் அசைந்து தொலைவில் செல்லக் காரணம் யாது?

.....

(6) "நாங்கள் இன்னுமொரு பட்டத்தைச் செய்வோம்" என்று சந்திரன் ஆலோசனை கூறியது ஏன்?

.....

02. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக

(1) 'இயற்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் எது?

1. இதயம் 2. செயற்கை 3. இன்பம்

(2) உனது பெயர் என்ன? என்பதிலுள்ள நிறுத்தற்குறி

1. காற்புள்ளி 2. வியப்புக்குறி 3. வினாக்குறி

(3) புளிப்புத் தன்மையுள்ள பழம் எது?

1. அப்பிள் 2. தேசிப்பழம் 3. கரும்பு

(4) "விளக்கு" என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது?
1. வெளிச்சம் 2. சூரியன் 3. தீபம்

(5) புதல்வன் என்பதன் எதிர்ப்பாற் சொல் எது?
1. மகள் 2. அண்ணா 3. மகன்

03. பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியமாக மாற்றுக.

(1) பழம் வாங்கினேன். .....

(2) கிளி பறந்தது. .....

(3) குதிரை வேகமாக ஓடியது. .....

(4) கோழி முட்டை இட்டது. .....

04. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி " √ " எனவும் பிழையாயின் பிழை " × " எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(1) தங்கை காலையில் பாடசாலைக்குச் சென்றாள். (.....)

(2) இரவில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னின. (.....)

(3) அன்னங்கள் குளத்தில் நீந்துகின்றது. (.....)

(4) அப்பா காலையில் விழித்தெழுவார்கள். (.....)

05. கீழே தரப்பட்ட வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையினை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்க.
(மாணவன், நீங்கள், ஆசிரியர்கள், நான், நாங்கள், நீ, பென்சில்கள், புத்தகம்)

(1) உயர்திணை தன்மை ஒருமை பெயர்ச்சொல் .....

(2) அ.ஃறிணை ஒருமை படர்க்கைப் பெயர்ச்சொல் .....

(3) உயர்திணை பன்மை படர்க்கைப் பெயர்ச்சொல் .....

(4) முன்னிலை பன்மைப் பெயர்ச்சொல் .....

(5) அ.ஃறிணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் .....

06. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

(1) Where …….. (are/ is) the school?

(2) Please open …… (you/ your) book.

07. கீழேயுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

(1) Please excuse me. ……..

(2) Clap your hands. …….

08. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

book/ I/ a / reading / am ……

09. கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(1) மெஹே நவதின்ன ……

(2) அ(TH)தனின் இந்த(G)கன்ன ……

(3) வம்(B)ப(ட்)டு ……

(4) ஆயுபோவன் ……

10. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

அம்மா சமைத்து முடித்து விட்டாரா? ……

11. நான் அம்மாவுடன் பொதுச் சந்தைக்கு சென்றேன். அங்கே கண்ட காட்சி என் மனதை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1. ……

……

2. ……

……

3. ……


……..……

01. 1. 2590 என்னும் இலக்கத்தை சொற்களில் தருக?

……

2. 5 என்னம் இலக்கததின் அமைவிடத்தினை தருக?

……..

02.  இச் செவ்வகத்தின் நீளம் 5 cm அகலம் 2 cm ஆகும் இவ்வாறான 5 செவ்வகங்கள் காணப்படுகின்றன.

1. நீளமான முறையில் அடுக்கி அளக்கும் போது கிடைக்கும் சுற்றளவு யாது?

……

2. அகலமான முறையில் அடுக்கும் போது கிடைக்கம் உருவின் இருபக்க அகலம் யாது?

……

03. ஒரு பண்ணையில் ஐந்து குழைகளையுடைய ஐம்பது தென்னை மரங்கள் காணப்பட்டன

1. ஒரு குழையில் 10 தேங்காய்கள் காணப்படுமாயின் அங்கு காணப்பட்ட மொத்த தேங்காய்கள் எத்தனை?

……..

2. ஒரு தேங்காய் 30 ரூபாய் வீதம் விற்றால் 4500 ரூபாய் பெறுவதற்கு அவர் விற்க வேண்டிய தேங்காய்கள் எத்தனை?

……

04. 1. 9540 உடன் 805 ஐ கூட்டுக. கூட்டுத்தொகை யாது?

……...

2. 6045 இலிருந்து 350 ஐ கழிக்க. வித்தியாசம் யாது?

……

05.

1.

	Kg	g
+	5	50
	3	85

2.

	Kg	g
-	9	750
	5	975

06. கண்ணன் வடக்கு நோக்கி சென்று பின்னர் கிழக்கு நோக்கி திரும்பினார் தான் செல்லும் திசையை மறந்து வலது பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று இடது பக்கம் திரும்பினார் அங்கிருந்து தெற்கு திசையில் திரும்பி நடந்து சென்ற அவர் களைப்படைந்து மேற்கு நோக்கி செல்ல தீர்மானித்து மேற்கு நோக்கி சென்றார்.

1. கண்ணன் தற்போது மாலையில் நடந்து வருகின்றார் ஆயின் அவரின் நிழல் எத்திசையில் விழும்

.....

2. அவர் காலையில் பயணத்தை ஆரம்பித்திருந்தால் அவரது நிழல் பயணத்தை ஆரம்பிக்கும் போது எத்திசையில் விழுந்திருக்கும்.

.....


07. 150$m\ell$ கெள்ளளவுடைய ஐந்து போத்தல்களில் குளிர் பானம் காணபபட்டது, அதே போல 175 $m\ell$ கொள்ளளவுடைய இருபது குளிர் பானப்போத்தல்களும் காணப்பட்டன.

1. 175 $m\ell$ குளிர் பானத்தின் மொத்த அளவினை ℓ தருக?

.....

2. அங்கு காணப்பட்ட மொத்த குளிர் பானத்தின் அளவு யாது?

.....




08. 1. மாலை 5.45 மணியை இக்கடிகாரத்தில் குறித்து காட்டுக.

2. நீர் கடிகாரத்தில் குறித்த நேரத்தை நியம நேரத்தில் எழுதிக் காட்டுக.

.....

09. 1. இவ் உருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?



.....

2. இவ் உருவில் காணப்படும் மூலைகள் எத்தனை?

.....

10. பாத்திரம் ஒன்றில் 6 லீற்றர் 250 மில்லி லீற்றர் குளிர்பானம் உள்ளது. பிள்ளை ஒன்று ஒவ்வொரு நாளும் 75 மில்லி லீற்றர் பானத்தை வெளியே எடுக்கிறது எனின் பத்து நாட்களின் பின்னர் பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் குளிர்பானத்தின் அளவு யாது?

..... லீற்றர் ..... மில்லி லீற்றர்

11. பிள்ளை ஒன்று A என்னும் இடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கி 5m தூரம் சென்று அங்கிருந்து தனது வலதுகைப் பக்கத்திற்குத் திரும்பி 5m தூரம் சென்று B என்னும் இடத்தை அடைந்தது. பிள்ளை A என்னும் இடத்திற்கு எத்திசையில் உள்ளது?

.....

12. 1. 0.1, 0.4, 0.7, ... , 1.3 இக் கோலம் ஏதோவோர் ஒழுங்குமுறையில் அதிகரித்துச் செல்கிறது. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை கீழுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

.....

2. எண்கோலத்தில் அடுத்துவரும் எண்களை எழுதுக.

2070, 2080, 2090 , ... , ... (2 புள்ளிகள்)

13. பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு மாணவனுக்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 30.00 ஐ வழங்குகிறது. அப்பாடசாலையில் 75 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் எனின் நான்கு நாட்களுக்கு அவர்களுக்கு சத்துணவிற்கு கிடைக்கும் பணம் யாது?


.....

14. 1. 10*m* நீளமான கம்பி ஒன்றில் இருந்து *50cm, 45cm, 60cm* நீளமான மூன்று துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. மீதியாக உள்ள கம்பியின் நீளத்தை மீற்றர் சென்ரிமீற்றரில் தருக.

.....

2. *3km 50m* இதனை மீற்றரில் தருக. .....

15. 1. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியினைப் பின்னமாகத் தருக.



.....

2. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியினைத் தசம எண்ணாகத் தருக.

.....

01 தொடக்கம் 30 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. குளங்கள் மற்றும் நீர் நிலைளில் அதிகம் காணப்படும் மலர் எது?
1. அல்லி 2. வெசாக் பூ 3. வெட்சி

02. நவம்பர் மாதத்தில் பூக்கும் பூ எது?
1. பப்பாசி 2. கொண்றை 3. கார்த்திகை

03. காற்றின் மூலம் பரவலடையும் தாவரம் எது?
1. மரமுந்திரிகை 2. தேக்கு 3. எருக்கலை

04. நத்தைகளை ஓட்டிலிருந்து வெளியே எடுத்து உண்ணும் பறவை எது?
1. ஆந்தை 2. செண்பகம் 3. பருந்து

05. இரவு, அதிகாலை பூக்கும் தாவரங்கள் முறையே அமையும் விடையைத் தெரிவு செய்க.
1. மல்லிகை, கடுபுல் 2. கடுபுல், தாமரை 3. கடுபுல், செவ்வந்தி

06. இறைச்சியினை மாத்திரம் உண்ணும் பறவையினை கொண்டமைந்த சோடியினைத் தெரிவு செய்க.
1. செண்பகம், கிளி 2. பருந்து, கழுகு 3. வெளவால், கிளி

07. செங்குத்தாக நீந்தக்கூடிய கடல் வாழ் உயிரினம் எது?
1. மீன் 2. ஆமை 3. கடற்குதிரை

08. பாடசாலைக்கு ஆற்றவேண்டிய கடமைகளும் பொறுப்புக்களுமாக அமையாதது
1. இலவசப் பாடநூல்களைப் பாதுகாத்தல்.
2. வகுப்பறைச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.
3. சக மாணவர்களிடம் நட்புடன் உறவாடுதல்.

09. பாரதம் என அழைக்கப்படும் நாடு எது?
1. இந்தியா 2. அமெரிக்கா 3. இலங்கை

10. இலங்கையின் மகாவலியில் காணப்படும் நீர்த்தேக்கம் எவையென முறையே தெரிவு செய்க.
1. பம்பரகந்த, துன்கிந்த
2. விக்டோரியா, பம்பரகந்த
3. மினிப்பே, ரந்தெனிகல

11. தேசப்படத்தில் பிரதான வீதியை குறிக்கப் பயன்படும் நிறம் எது?
1. சிவப்பு 2. நீலம் 3. பச்சை

12. வானத்தின் தென்திசையில் அடிவானத்தை நோக்கி சற்றுச் சாய்ந்த நிலையில் காணப்படும் உடுத்தொகுதி எது?
1. பெருங்கரடி 2. கார்த்திகை 3. தென்சிலுவை

13. வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம் எது?
1. கொலாஜ் 2. அல்பனா 3. ஓரிகாமி

14. கோவிட் தொடர்பான விடையங்களுக்கு முன்னின்று செயற்படும் நிறுவனம் எது?
1. ஆட்பதிவுத் திணைக்களம்
2. அஞ்சல் திணைக்களம்
3. பொதுச் சுகாதார அலுவலகம்

15. இலங்கை அரசின் வருமானத்திற்காக வழங்கப்படுகின்ற சேவைகளைக் கொண்டமைந்த விடையைத் தெரிவு செய்க.
1. பேருந்து, தொலைபேசி 2. கல்வி, சுகாதாரம்
3. சுகாதாரம், புகையிரதம்

16. இப்படத்தில் காணப்படும் விளையாட்டில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை யாது?



1. 3 2. 6 3. 11



17. இப்படத்தில் காணப்படுபவர் யார்?
1. டீ.எஸ் சேனநாயக்க
2. டீ.பி ஜாயா
2. சீ.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா

16. நீரில் மிதக்கும் பொருட்களைக் கொண்டமைந்த தொகுதியினைத் தெரிவு செய்க.
1. பந்து, றெஜிபோம், பலகைத்துண்டு, இலைகள்
2. பந்து, றெஜிபோம், பலகைத்துண்டு, இரும்பு
3. பந்து, றெஜிபோம், கண்ணாடித்துண்டு, இலைகள்

17. அதிகளவு புரதத்தைக் கொண்டதும் ஏழைகளின் இறைச்சி எனவும் அழைக்கப்படும் தாவரம் யாது?
1. வாழைப்பழம் 2. காளான் 3. ஈரப்பலா

18. இலங்கையில் மண்சரிவு ஏற்படக்கூடிய இடமாக அமைவது.
1. கண்டி 2. யாழ்ப்பாணம் 3. காலி

19. இலங்கையின் முதலாவது வலாற்று சிறப்பு மிக்க இராச்சியம் அமைவு பெற்ற மாவட்டம்.
1. யாழ்ப்பாணம் 2. கண்டி 3. அனுராதபுரம்

20. பின்னவல யானைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
1. கேகாலை 2. கண்டி 3. பதுளை

21. றம்பொடை சுரங்கப்பாதை பொறிக்கப்பட்டுள்ள நாணயத்தாள் எது?
1. ஐந்நூறு 2. நூறு 3.ஆயிரம்


22. கட்புல செவிப்புல சாதனமாக அமைவது எது?
1. தொலைக்காட்சி 3. பத்திரிகை 3. ஒலிபெருக்கி

23. எமது உருவத்தைப்பார்த்து சீர் செய்து கொள்ள உதவுவது?
1. நண்பர் 2. பருப்பு 3. நிலைக்கண்ணாடி

24. எமக்குத் தகவல்களை நேரடியாக வழங்கத்தக்க ஓர் ஊடகம்
1. பத்திரிகை 2. வானொலி 3. அறிவித்தல்



25. இக்கட்டத் தொகுதி அமைந்துள்ள மாவட்டம் எது?
1. மட்டக்களப்பு
2. குருணாகல்
3. கெழுமபு



26. இவ்வுரு குறிப்பது.
1. நண்டு நடை
2. தேள்நடை
3. பூனைநட

27. மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணி
1. தேனீ 2. காகம் 3. கிளி

28. கூரிய உபகரணங்களை கொடுக்கும் போது
1. முனைப்பக்கத்தை நீட்டுதல்
2. கைப்பிடிப்பகுதியை நீட்டுதல்
3. எவ்வாறாயினும் கொடுக்கலாம்

29. தாவரம் ஒன்றின் பகுதியாக அமைவது
1. அல்லி 2. வேர் 3. புல்லி

30. தமிழர், சிங்களவர் சேர்ந்து கொண்டாடும் பண்டிகை எது?
1. வெசாக் 2. தைப்பொங்கல் 3. சித்திரைப்புத்தாண்டு